சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண்.ஓ.எஸ்.128/2017

2020ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் லெட்சுமி | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>குறுக்கு விசாரணை (2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

04.03.2020 - என் அப்பாவை பெற்றவர் பெயர் செல்லமுத்து. நாங்கள் எல்லாம் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். அதே போல் 2 முதல் 4 பிரதிவாதிகள் பிறப்பதற்கு முன்பே செல்லமுத்து இறந்துவிட்டார். என் தாத்தா இறக்கும்போது என் தகப்பனார் மட்டுமே வாரிசு ஆவார். என் அப்பாவிற்கு மிகவும் சொற்பமான சொத்து தான் பூர்வீக சொத்து என்றால் சரிதான். 3வது இலக்க சொத்தில் மேற்கு பக்கத்தில் ராஜேந்திரன் குடியிருக்கிறார். நடுவில் கிருஉஷ்ணன் வீடு கட்டியுள்ளார். கிழக்கு கடைசியல் 3ல் 1 பங்கில் சுப்பிரமணி வீடு கட்டியுள்ளார். இந்த 3 பேர்களும் ஆவியூர் பஞ்சாயத்தில் இடத்தை வாங்கி தனித்தனியாக குடியிருக்கிறார்கள் என்றால் ஆமாம். என் அப்பா இருக்கும்போதே வீடு கட்டிக்கொண்டார்களா என்றால் என் அப்பா முடியாமல் இருக்கும்போதே 2 முதல் 4 பிரதிவாதிகள் அவர்களாக வீடு கட்டிக்கொண்டார்கள். 2 முதல் 4 பிரதிவாதிகள் வீடு கட்டுவதற்கு நான் எதுவும் ஆட்சேபணை பண்ணவில்லை. என் அப்பா தான் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு திருமணம் முடித்துவைத்தார். திருமணத்தின்போது எங்கள் அப்பா எங்கள் இருவருக்கும் சொந்தத்தில் திருமணம் முடித்ததால் நகை எதுவும் போடவில்லை, திருமண செலவை என் அப்பா ஏற்றுக்கொண்டார். புஞ்சை நிலத்தை 3 பிரதிவாதிகளும் சேர்ந்து அனுபவித்து வருகிறார்கள். ராஜேந்திரன் எந்த திசையில் அனுபவிக்கிறார்கள் என்றால் கூட்டுக்குடும்பமாக அனுபவம் செய்கிறார்கள். என்

அம்மா அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஆண்மக்களுக்கு தான பத்திரமாக எழுதிக்கொடுத்துவிட்டார், அதை பொறுத்து நாங்கள் என் அண்ணன்கள் மீது வழக்கு போட்டுள்ளோம். என் அம்மாவிற்கும் என் அண்ணன்மார்களுக்கும் இடையில் வழக்கு நடக்கிறது. என் அம்மாவிற்கு எதிராக வழக்கு போட்டுள்ளோம். எங்கள் அம்மா எங்கள் அண்ணன்மார்களுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு எங்கள் பெயருக்கு பத்திரம் போட்டது செல்லாது என்று 2 முதல் 4 பிரதிவாதிகள் எங்கள் மீதும் தாயார் மீதும் வழக்கு போட்டுள்ளார்கள். 3வது இலக்க சொத்தில் என் அண்ணன்மார்கள் வீடு கட்டியுள்ள இடம் என் அப்பாவால் கிரயம் வாங்கப்பட்ட சொத்தாகும். அந்த இடத்தில் பிரதிவாதிகள் காரை வீடு கட்டுவதற்கு முன்பு என் அப்பா கட்டிய மண்வீடு இருந்தது. அந்த மண்வீட்டை இடித்து தான் என் அப்பா இருக்கும்போதே நாங்கள் எல்லோரும் சேர்ந்து அந்த காரை வீடு கட்டினோம். எந்த வருடம் கட்டினோம் என்றால் வருடம் தெரியாது, என் அப்பா முடியாமல் இருக்கும்போதே கட்டிவிட்டோம். 2 மாடி சென்ட்ரிங் வீடாகும். பிராதில் எங்காவது 2 மாடி சென்ட்ரிங் வீடு என் அப்பாவால் கட்டப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2012ல்தான் மேல்சொன்ன வீடு கட்டப்பட்டது என்றால் வருடம் தெரியாது. 19.12.2012ல் தான் வீடு கட்ட அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என் அப்பா இறந்தது 2009ம் வருடம். மேற்சொன்ன 3 வீடுகளும் எங்கள் அப்பா இறந்த பின்பு 2 முதல் 4 பிரதிவாதிகள் பாகம் பிரித்து வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல, பாகம் பிரிக்கவில்லை. என் அப்பா பெயர் பெரியகருப்பன். என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் உள்ள கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்து இல்லை. என் அப்பா போட்ட கையெழுத்திட்ட பத்திரம் எதுவும் என்வசம் உள்ளதா என்றால் இல்லை. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் அப்பாவிற்கு கையெழுத்து போடத்தெரியாது. என் அப்பா என் பள்ளி சான்றிதழில் கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் என் அப்பாவிற்கு கையெழுத்து போடத்தெரியாது. பெருமாள் தேவர் மகன் நாராயணனை தெரியும். முத்துராமு தேவர் மகன் சண்முகவேலை தெரியும். அவர்களுக்கும் எங்களுக்கும் விரோதம் இல்லை. மேற்சொன்ன இருவர்களையும் சாட்சியாக

வைத்து என் அப்பா உயில் எழுதி வைத்துள்ளதாக எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நாராயணனிடமும், சண்முகவேலிடமும் என் அப்பா உயில் எழுதி வைத்த விசயம் பற்றி கேட்டேனா என்றால்கேட்டேன் அவர்கள் உயில் எழுதவில்லை என்று கூறிவிட்டார்கள். அந்த இரண்டு பேர்களும் தற்போது ஊரில் தான் உள்ளார்கள். அவர்கள் இருவரும் வந்து சாட்சி சொன்னால் உயிலை நான் ஏற்றுக்கொள்வேனா என்றால் ஏற்றுக்கொள்வேன். என் அப்பா 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை எழுதி வைத்து மூத்த மகனுக்கு மேல்புறத்திலும் 2வது மகனுக்கு நடுப்புறமும் 3வது மகனுக்கு கீழ்புறமும் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பா இறக்கும் முன்பு 6 மாதமாக காச நோயால் பாதித்து இருந்தார் என்றால் ஆமாம். அவர் எழுந்து நடக்க முடியாமல் இருந்தார் என்றால் ஆமாம். ஆனால் அவர் நல்ல பேசும் நிலையிலும் நல்ல மனநிலையிலும் இருந்தார் என்றால் ஆமாம். என் அப்பா தான் உயில் எழுதி வைக்க சொல்லி சாட்சிகளை வரச்சொல்லி உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் இல்லை. மேற்சொன்ன உயிலில் கண்டபடி தான் தாவா 3வது இலக்க சொத்தை பிரித்து 2 முதல் 4 பிரதிவாதிகள் 2012ல் காரை வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. 3வது இலக்க சொத்தில் உள்ள 6 வீடுகளும் முப்பது இலட்சம் போகும் என்றால் சரிதான். அந்த வீட்டிலேயே கீழ்புறத்தில் என் அண்ணன் சுப்பிரமணி கடை வைத்திருக்கிறார். சுப்பிரமணி தனியாக கட்டியுள்ள வீட்டில் கீழே கடை வைத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள கடை தான் என் அண்ணன் சுப்பிரமணியின் கடை என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொள்வதால் அந்த இரண்டு புகைப்படங்களும் பி.வா.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. அந்த கடையோடு சேர்ந்த வீட்டில் சுப்பிரமணி குடியிருந்து வருகிறார். ராஜேந்திரனும், கிருஷ்ணனும் கட்டியுள்ள வீட்டை வாடகைக்கு விட்டுள்ளார்கள். தான் கட்டிய வீட்டை அதிக வாடகைக்கு விட்டுவிட்டு ஊருக்குள் தனியாக குறைந்த வாடகைக்கு இருக்கிறார்கள். பிராது 3வது இலக்க சொத்தில் கடை இருப்பதை நான் காட்டவில்லை என்றால் சரிதான். அதேபோல் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் வாடகைக்கு விட்டிருப்பதையும் சொல்லவில்லை என்றால் சரிதான். பிராது

3வது இலக்கத்திற்கு நான் 10 லட்சம் தான் மதிப்பு போட்டிருக்கிறேன். 3வது இலக்க சொத்தை தவிர்த்து மற்ற சொத்துக்களின் மதிப்பு 30 இலட்சம் இருக்கும் என்றால் இருக்கும். ஆக மொத்தம் 60 இலட்ச சொத்திற்கு வழக்கு போட்டுள்ளோம். நான் சொல்லுகிற மதிப்பின்படி இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. என் தாத்தா சாகும்போது நாங்கள் பிறக்கவில்லை என்பதால் இந்த சொத்தில் பிறப்பால் உரிமையில்லை என்றால் சரியல்ல. அதனால் என் தாத்தாவின் தனிப்பட்ட சொத்தாகிவிடும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3வது இலக்கத்தில் உள்ள வீடுகளுக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் அவரவர்கள் வீட்டு வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் இப்போது அவ்வாறு செலுத்திவருகிறார்கள். அதில் உள்ள 3 வீடுகளுக்கும் பிரதிவாதிகள் தனித்தனியாக அவர்கள் பெயரில் மின்இணைப்பு பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் தாயார் எழுதி வைத்த சொத்தை பொறுத்து எங்கள் மீது அருப்புக்கோட்டை முன்சிப் கோர்ட்டில் ஓ.எஸ்.190/ 2014 வழக்கு போட்டிருப்பதால் அவர்கள் மீது கோபம் கொண்டு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம். என் தகப்பனார் இறந்ததில் இருந்து தாவா சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகள் எங்களை அனுபவிக்க விடாமல் அவர்களாக அக்கிரமமாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே நாங்கள் கூட்டு அனுபவத்தில் போட்ட பிராது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.